<u>**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**</u>
<u>**RANIPET DISTRICT.**</u>

**DEPOSITION OF WITNESS**
<u>**MCOP.No.128/2020- PW-1**</u>

| | |
|---|---|
| Name | திரு.வி.ராஜ்குமார் |
| Father Name | திரு.ஜி.வெங்கடேசன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **14.07.2026.**

<u>**2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**</u>

விபத்தில் இறந்து போன சாந்தா என் தாயார் என்றால் சரிதான். என் தந்தை முதல் மனுதாரர் வெங்கடேசன் இந்த வழக்கு நிலுவையிலிருக்கும் போது இறந்துவிட்டார். என் தந்தைக்கும், தயாருக்கும் நானும், 3-ம் மனுதாரர் மட்டுமே வாரிசுதாரர்கள். என் தாயார் சாந்தா விபத்தில் இறப்பதற்கு முன்பு சித்தாளாக கட்டிட வேலைக்கு சென்று வந்தார். அவர் வேலைக்கு சென்றால் தான் அவருக்கு வருமானம் கிடைக்கும் என்றால் சரிதான். அவர் தினமும் வேலைக்கு செல்வார். என் தாயார் வார கூலியாக ரூ.3,000/- முதல் ரூ.4,000/- வரை சம்பாதித்து வந்தார். என் தாயார் இறக்கும் போது அவருக்கு 40 வயது ஆகும். என் தாயாரின் வயது, வருமானத்தை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் என் தாயாரும், என் சகோதரர் அஜித்குமாரும் பயணம் செய்து வந்தனர். நாங்கள் மூவரும் ஒரே மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளோம் என்றால் சரிதான். அந்த மோட்டார் சைக்கிளுக்கு நான் தான் உரிமையாளர். விபத்து சமயத்தில் நான் மட்டும் தலைக்கவசம் அணிந்திருந்தேன். விபத்து சமயத்தில் எனக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கு உரிமம் இருந்தது. என்னுடைய ஒட்டுநர் உரிமத்தின் நகலை தாக்கல் செய்யவில்லை. என்னுடைய மோட்டார் சைக்கிளுக்கு விபத்து சமயத்தில் காப்பீடு இல்லை என்றால் சரிதான். என்னுடைய மோட்டார் சைக்கிளில் 3 பேர் பயணம் செய்து என்னுடைய அஜாக்கிரதை காரணமாக விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால் 2-ம் எதிர்மனுதாரரிமிருந்து இழப்பீடு கோர முடியாது என்றாலும், நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை மிகவும் அதிகமானது என்றாலும் சரியல்ல. 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்பதால் 2-ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்படவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>:-** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.